RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s56

OPEN ACCESS

# தமிழ்ப் பண்பாட்டுத் தளத்தில் அயோத்திதாசப் பண்டிதரின் திராவிடக் கருத்தியல்

## கு. முத்துலிங்கம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா.

# Dravidian ideology of Iyothee Thass Pandithar in the Tamil cultural arena

## G. Muthulingam [a, *]

[a] Department of Tamil, Presidency College (Autonomous), Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: gkm.uk1987@gmail.com

Received: 17-08-2021
Revised: 07-04-2022
Accepted: 19-04-2022
Published: 29-05-2022

Check for updates

### ABSTRACT

Have created religions and sastras in Indian society and kept people from living together. Such thinking has grown into an ideology and pervaded the nation. It is in this context that Dravidian ideology, which has emerged in the Tamil landscape, has developed into an ideology of liberation from the superstitions and oppression of the people. Scholars such as Caldwell, Ayothee Thasar, and Periyar have played a major role in the formation and development of such progressive ideology. This article aims to examine the ideas put forward by Ayothee Thasar in line with Dravidian ideology in the life cultures of the Tamil people.

**Keywords:** Dravidian ideology, Caldwell, Iyothee Thass Pandithar, Religions

## முன்னுரை

தமிழ்ச் சமூகம் மிக நீண்ட அறிவு மரபையும் பண்பாட்டு மரபையும் தன்னகத்தே கொண்டுள்ள சமூகம் ஆகும். அதில் அயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் தர்க்கமும் தத்துவார்த்தங்களும் மக்களிடையே பல்வேறு சிக்கல்களை உற்பத்தி செய்திருக்கின்றன. அதற்கு முற்று முடிவான தெளிவினை, தீர்வினை அளிக்கவல்ல கருத்தியல்கள் இன்னும் தோன்றியவண்ணமே உள்ளன. இந்திய கண்டம் எனும் இந்தப் பரந்த நிலப்பரப்பினுள் இருவேறு சித்தாந்தக் கருத்துகள் நிலவி வருவதைப் பண்டைய காலத்திலிருந்தே அறியலாம். ஒன்று கடவுளின் பெயரால் மக்களின் இயற்கையான சில நம்பிக்கைகளை மூலதனமாகக்கொண்டு அவர்களைச் சுயசிந்தனை அற்றவர்களாக ஆக்குவது. மற்றொன்று இச்சிந்தனையின் நேரெதிராக நின்று விவாதித்தும் தெளிவுபடுத்தியும் மக்களைப் பகுத்தறிவு மிக்கவர்களாக நன்னெறிப் படுத்த முயற்சிப்பது. இத்தகைய முயற்சி இந்திய அளவில் கௌதம புத்தர் காலத்திலும் சமணத் தீர்த்தங்கரர் காலத்திலும் தொடங்கிவிட்டதை அறியலாம்.

தமிழ் இலக்கியங்களின்வழி அறிய முற்பட்டால் சங்கம் மருவிய காலம் என்று சொல்லப்படுகிற காலத்திலிருந்து மேற்கூறிய முயற்சிகள் தமிழ் நிலப்பரப்பில் தொடர்ந்து வருவதை அறிந்து கொள்ள முடியும். இம்முயற்சியின் தொடர்ச்சியாய்த் தென்னிந்திய மொழிகளின் ஒப்புநோக்கிய அடையாளமாகத் திராவிடம் எனும் சொல்லாடல் உருவாகி, நாளடைவில் ஆரியத்திற்கு எதிரான திராவிடச் சிந்தனையாகவும், சமஸ்கிருதம், இந்தி மொழி உள்ளிட்ட வடமொழிகளுக்கு மாற்றாகத் தமிழை

முன்னிருத்தியும் கடவுள் என்கிற கருத்தியலுக்கு எதிரான பகுத்தறிவுப் பாதையில் கடவுள் மறுப்பையும் பேசி, திராவிடம் ஒரு கருத்தியல் தத்துவமாக வளர்ந்திருக்கிறது. இன்று தமிழக அரசியல் தளத்திலும் பண்பாட்டுத் தளத்திலும் மாபெரும் புரட்சிக் கருத்தியலாக, தத்துவமாக விளங்குகிறது. இக்கருத்தியல் சிந்தனையை வளர்த்தெடுக்க அரும்பாடு பட்டவர் தந்தை பெரியார் என்பதை அறிவோம். பெரியாருக்கும் முன்னோடியாக இத்தகைய சிந்தனையைத் தமிழ் மண்ணில் அயோத்தாசப் பண்டிதர் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார் என்பதை அவர்கள் வாழ்ந்த காலநிலை வாயிலாக அறிகிறோம். அதில் தமிழ்ப் பண்பாட்டுத் தளங்களில் அயோத்திதாசப் பண்டிதரின் திராவிடக் கருத்தியல் சிந்தனை எத்தகையது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## அயோத்திதாசப் பண்டிதரும் திராவிடக் கருத்தியலும்

தமிழக அரசியல் சூழலில் அனைவருக்கும், அனைத்திலும் சம உரிமைகள் கிடைக்கப்பெறாத, பாளையக்கார, ஜமீன்தாரிய அதிகார முறைகளின் மிச்சமும் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் அதிகாரப் பரவலும் நிலவிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் அயோத்திதாசப் பண்டிதர் பிறந்திருக்கிறார். இவர் 1845 மே மாதம் 20 ஆம் நாள் சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியிலுள்ள மக்கிமா நகரில் சித்த மருத்துவப் பாரம்பரியம் மிக்கக் குடும்பத்தில் பிறந்தார். காத்தவராயன் என்பது இயற்பெயர். வீ. அயோத்திதாசக் கவிராயர் என்பவரிடம் கல்வி கற்றதின் பயனாக, அறிவு விருத்திக்கு வழிகாட்டிய ஆசிரியரின் பெயரைத் தம்பெயராகச் சூட்டிக்கொண்டிருக்கிறார். கல்வி அறிவிலும் மொழிப் புலமையிலும் சிறந்து விளங்கிய க. அயோத்திதாசப் பண்டிதர் தொடக்கக் காலத்திலிருந்தே சமூகப்பணி, சித்த மருத்துவப்பணி, இதழியல் பணி எனச் செயலாற்றியிருப்பதை அறிய முடிகிறது (Angayarkanni & Kiruthiga, 2021).

பண்டைய வரலாற்றில் கி.பி.470 இல் சமண முனிவர் வச்சிரநந்தி என்பவர் திரமிள சங்கம் என்கிற திராவிடச் சங்கத்தை மதுரையில் நிறுவினார் என்பதையும் அச்சங்கம் இலக்கிய ஆக்கத்திற்காகத் தொடங்கப்பட்டுச் செயலாற்றியிருக்கிறது என்பதும் புலனாகும். பிறகு திராவிட மொழி நுலின் தந்தை என்று போற்றப்படுகிற ஐரோப்பியரான இராபர்ட் கால்டுவெல் (1814-1891) தனது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856) என்ற மொழியியல் ஆராய்ச்சியின் பயனாக, தமிழை முதன்மையாகக் கொண்ட தென்னிந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் என்று நிறுவியிருக்கிறார். ஆரிய மொழியான சமஸ்கிருதத்திலிருந்து பிற மொழிகள் அனைத்தும் தோன்றியது என்ற இந்தியத் தேசிய கருத்திற்கு மாற்றாக திராவிட அடையாளத்தைத் தமிழ்ப் பரப்பில் கால்டுவெல் வழங்கியிருக்கிறார் என்பதையும் இதனைப் பிற்காலங்களில் பாவாணர் உள்ளிட்ட தமிழறிஞர்கள் பலரும் ஆராய்ந்து புலப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் இலக்கிய, மொழி வரலாற்றின்வழி விளங்கிக் கொள்ளலாம்.

இத்தகையச் சூழலில் அத்வைதானந்த சபையை உருவாக்கி வருணக்கோட்பாட்டையும் சாதிய ஆதிக்கப் போக்கினையும் எதிர்த்து மக்களை ஒருங்கிணைத்துச் சமூகப் பணியாற்றிக் கொண்டிருந்த அயோத்திதாசப்பண்டிதர், அச்சபையின் மூலம் 1881 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் “இந்திய தேசத்திலுள்ள பழங்குடி மக்களும் பஞ்சமர் என்றழைக்கப்படும் தாழ்த்தப் பட்டவர்களும் இந்துக்கள் என்ற அடையாளத்தைக் கொண்டவர்கள் அல்லர். எனவே இவ்விரு மக்களும் ‘ஆதித் தமிழர்கள்’ என்பதாகவே கணக்கெடுப்பில் பதிவு செய்யப்படல் வேண்டும்” என்று கோரிக்கையை முன்வைத்திருக்கிறார் (Dharmaraj, 2019). பிறகு 1885இல் திராவிட பாண்டியன் எனும் இதழில் ஜான்ரத்தினம் அவர்களோடு இணைந்து பணியாற்றியுள்ளார். 1887இல் நாரதீய புராணசங்கைத் தெளிவு எனும் சுவடி மூலம் சாதி பேத விவரத்தையும் பௌத்தர்கள் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்ட விவரத்தையும் அறிந்துகொண்டிருக்கிறார். இதன்வாயிலாக “அயோத்திதாசரின் சிந்தனைப்போக்கில் மாற்றம் ஏற்பட்டு பௌத்தத்தை உள்வாங்கத் தொடங்கிய காலம்” இது என்று குறிப்பிடுகிறார் (Vijayakumar, 2019).

இவ்வாறு சாதி, மதங்களுக்கு எதிரான செயல்வடிவமாகக் கருதும் அளவிற்கு முற்போக்குச் சிந்தனையாளராக விளங்கிய அயோத்திதாசர் 1890இல் திரவிட மகாஜன சபை எனும் அமைப்பை

நிறுவியிருக்கிறார். திராவிட எனும் பெயரில் அமைந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடபட்ட முதல் வெகுசனமக்கள் இயக்கம் இதுவே எனலாம். அத்தகைய அமைப்பைக் கண்ட முதல் தலைவர் நாம் அறிந்த அளவில் அயோத்திதாசப் பண்டிதராகவே இருக்கிறார். இங்குத் தமிழ் - திராவிடம் என்பதை ஒரே விதமான பொருளில்தான் அயோத்திதாசர் கையாண்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனை "1881 இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியின்போது ஆதித் தமிழன் என்ற சொல்லை எந்தப் பொருளில் பயன்படுத்தினாரோ அதே பொருளிலேயே திராவிடன் என்ற சொல்லையும் பயன்படுத்தியிருக்கிறார்" என்று அவர்கள் தரும் கருத்து மெய்ப்பிக்கிறது. திராவிட மகாஜன சபை எனும் அமைப்பின் வழியே எண்ணற்ற கோரிக்கைகள், தீர்மானங்களை அரசாங்கத்திற்கும் அரசியல் இயக்கங்களுக்கும் அனுப்பியிருக்கிறார் என்பதை அறிந்தகொள்ள முடிகிறது (Dharmaraj, 2019).

சமூகப் போராளியாகத் திகழ்ந்த அயோத்திதாசப் பண்டிதர் 1907 ஆம் ஆண்டு 'ஒரு பைசாத் தமிழன்' என்று இதழ் தொடங்கிப் பின்பு 1908இல் தமிழன் எனும் பெயரில் அதனை நடத்தியிருக்கிறார். அவ்விதழின் மூலமாக திராவிட, பௌத்த சிந்தனையுடன், தமிழ்ச் சமூகத்தின் அரசியல், பண்பாட்டுத் தளங்களில் எண்ணற்ற அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறார். ஆரியத்திற்கு எதிரான திராவிடக் கருத்துகளைத் 'தமிழன்' இதழில் பேசிவந்த பண்டிதர் தமிழையும் திராவிடத்தையும் வேறுவேறாகக் கருதுபவர்களுக்கு விளக்கமளிக்கும் முகமாக, ஒன்றாகவே கருதவேண்டிய அவரது சிந்தனையை "திராவிடமென்பதே தமிழென்பதற்கு சூத்திர ஆதாரங்கள் இருப்பதுடன் வடநாட்டோரும் சிங்களதேசத்தோருந் தமிழை திராவிடபாஷையென்றும், தமிழ் பாஷைக்குரியோரை திராவிடர்களென்றும் வழங்கி வருவதை நாளதுவரையிற் காணலாம்" என்று விளக்கியிருப்பதிலிருந்து அறிய முடிகிறது (Aloysius, 1999).

தமிழ், தமிழர், திராவிடம், பௌத்தம் என்ற கருத்தியல்களில் செயலாற்றியிருக்ககூடிய அறிஞர் அயோத்திதாசர். எந்த இடத்திலும் இந்த நேர்க்கோட்டில் எங்கும் பின்வாங்குதலோ, மாற்றிப் பேசுவதோ இல்லாமல் ஆரியப் பார்ப்பனியத்தை, சாதி வருணக்கோட்பாட்டினை, சமரசமின்றி எதிர்த்து தமிழர்களின், ஏன் இந்தியத்தின் வரலாற்றுக்கே புத்துயிர் அளிக்கும் விதமாக சாதியற்ற தமிழர்களுக்கான திராவிடக் கருத்தியலைக் கட்டமைத்திருக்கிறார். நாம் இன்று பேசும் திராவிட கருத்தியலுக்கு வடிவம் கொடுத்த தலைவர்களில் முதன்மையான தலைவராகத் திகழ்கிறார் என்பது புலனாகிறது.

## பண்பாட்டுத் தளங்களில் பண்டிதரின் பகுத்தறிவு

மனித வாழ்வில் பண்பாடு என்பது மக்களின் வாழ்வியலோடு தொடர்புடையது எனலாம். மனிதனின் பண்பட்ட நடத்தையில் தொடங்கி, குடும்பம், சமூகம் எனும் குழுக்களின் நடத்தை செயல்பாடுகளிலிருந்து பெறப்படும் பெரும்பான்மையான கூறுகளும் பண்பாடு என்று வரையறுக்கலாம். பண்பாட்டின் உன்னதத்தினை "மனிதர்களுக்கான தனிப்பட்ட பண்புகள் பலவாக இருப்பினும் அவற்றில் அசாதாரமான பண்பு என்னவெனில் பண்பாடு என்பதே" என்று பக்தவத்சல பாரதி கூறுவதிலிருந்தும் உணர்ந்து கொள்ள முடியும் (Bhakthavatsala Bharathi, 2018). இத்தகைய மனிதப் பண்பாட்டில் எண்ணற்ற கட்டுக்கதைளின் மூலம் பல நடத்தை மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கிறது இந்து பார்ப்பனிய மதம். இதிலிருந்து மனிதர்களுக்குத் தெளிவுபடுத்தும் விதமாக,

"அறிவுக்கப்புறப்பட்ட கதைகளை ஆலோசித்தல் நல்லது. மதியை மயக்கும் புராணத்தைக் கவனிக்க வேண்டும். எதையும் ஆய்ந்தறிய வேண்டும் என்று உரைப்போன்மேல் கடுஞ்சினங்கொள்வதிலும், நம்முள்ளங்கையில் உள்ள மூட பழக்க வழக்க கட்டுகளை அவிழ்த்து உண்மை யறிதலே பேருபகாரமும், சரியான பகுத்தறிவும், தெய்வத்தன்மையுமாகும்." என்று பகுத்தறிவுப் பாதையில் மக்களை வழிநடத்தும் கருத்துகளை அயோத்திதாசப் பண்டிதர் உரைத்திருக்கிறார் என்பதை விளங்கிக் கொள்ளமுடிகிறது (Iyothee Thass Pandithar, 1999).

## பெண்ணுரிமை

வால்கா முதல் கங்கை வரை மட்டுமல்ல. கங்கை முதல் காவிரி, வைகை வரையிலும் கூட, பெண்களை அடிமைப்படுத்தி முடக்குவதில் இச்சமூகம் பெருமுனைப்புக் காட்டியிருக்கிறது. அதனைக் கண்டிக்கும் விதமாக இந்திய தேய ஸ்திரீகளின் கேட்டிற்குக் காரணஸ்தர் யார்? என கேள்வியுடன் தொடங்கும் அயோத்திதாசர் இந்திய தேசப் புருஷர்களேயாவர் என்று தொடங்கி, "இத்தேசத்தாருள் பெரும்பாலார் பெண்களுக்குப் படிப்பு கற்பிக்கலாகாதென்றே தடுத்துவருகின்றார்கள். சிலர் அத்தகையக் கல்வி கற்றும் பழைய சோம்பலுடன் கலந்து அக்கல்வியையும் பாழாக்கித் தாங்களும் பாழடைந்து போகின்றார்கள். கற்றப் பெண்கள் யாவரும் வித்தையையும் வியாபாரத்தையும் ஏந்தி வெளிவருவார்களாயின் பழிச்சொற்களும் இழிச்சொற்களுமற்று சகலராலும் நன்கு மதிக்கப்படுவதுடன் தங்கள் மரணபரியந்தம் சுகசீவ வாழ்க்கையைப் பெறுவார்கள்" (Aloysius, 1999).

"பெண்களுக்கு கல்வி கற்பிப்பதனுடன் கைத்தொழிலையும் வியாபாரத்தையும் கற்பிப்பதே மிக்க மேலாம்" என்று பெண்களுக்குக் கல்வியின் அவசியத்தை உணர்த்தியதோடு தொழிலிலும் வியாபாரத்திலும் அவர்களை ஈடுபட விடுவதே, கணவனை இழந்த பின்னும் அவர்களின் மரண காலம் வரை சொந்தக் காலில் நிற்கும் வல்லமையைப் பெறச் செய்யும். அவற்றோடு இந்த ஆணாதிக்கச் சமூகம் அவர்களைப் பழித்தும் இழித்தும் பேசுவதற்கு இடமளிக்காமல் பெண்களின் வாழ்வு சிறக்கும் என்று உரைத்திருக்கிறார்.

இதோடு மட்டுமன்றி பெண்களின் மறுமணத்திற்கும் அயோத்திதாசப்பண்டிதர் குரல்கொடுத்திருக்கிறார் என்பதைக் காணமுடிகிறது. கைம்பெண்களை வீட்டில் வைத்து கண்குளிரப் பார்க்கும் கனவான்களே! என விளித்துக்கூறும் அயோத்திதாசர் "விதவைகளை மறுவிவாகஞ் செய்யலாகாதெனத் தடுத்து அதற்காய சிலத் திருட்டு சாத்திரங்களையும், குருட்டு சாத்திரங்களையும் வரைந்து வைத்துக்கொண்டு கைம்பெண்களால் வருஷாந்திரம், திதி, தட்சணையும், அரிசி பருப்பும் பெற்று சீவிப்பதற்கு தோன்றியுள்ள பொய்க்குருக்களே ஆவர். அவர்களால் ஏற்படுத்திக்கொண்ட சாத்திரங்களானது அவர்களைப் பின்பற்றியுள்ளப் பேதைமக்களை வாதிப்பதுமன்றி தங்களையும் தங்கட் குடும்பத்தோரையும் நகைக்கத்தக்க வகையால் நசித்து வருகின்றது" (Aloysius, 1999). என தன் ஆற்றாமையை வெளிப்படத்தி அத்தகைய பெண்மக்களை அல்லல் அடையவிடாமல் ஆதரிக்கவேண்டும் என்று கைம்பெண் மறுமணத்திற்கு உரத்து மொழிந்திருப்பது அயோத்திதாசரின் பெண்ணுரிமை சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது.

## சாதி, மத ஒழிப்பு

உலகின் வேறு எங்கும் காணமுடியாத வேற்றுமைதான் சாதி வேற்றுமை. மொழிவழியாகவும் பண்பாட்டிலும் வெவ்வேறு விதமான இனக்குழு மக்கள் வாழும் இந்திய தேசத்தில் சாதி வேறுபாட்டுச் சிந்தனையில் மட்டும் ஒற்றுமை இருப்பதைக் காணமுடியும். அதற்குப் பார்ப்பனர்களின் சூழ்ச்சி மிகுந்த வலைபின்னல்தான் காரணம் என்பதை யாவரும் அறிவர். காரணம் அறிந்தாலும் அதிலிருந்து விடுவித்துக்கொள்ள பார்ப்பனியத்தைப் பின்பற்றும் சாதி இந்துக்கள் முன்வருவதில்லை. அதைவிட்டு விலகி ஒழிக்க முற்படுபவர் சிலரே. அந்தச் சிலரில் தமிழகத்தில் முன்னோடியான சிந்தனையாளராக விளங்கும் "மொழிக்குமொழி பேதங்களாக தங்கள் தங்கள் சீவனத்திற்கு மதங்களையும் அதற்காதரவாக சாதிகளையுந் தற்காலம் ஏற்படுத்திக் கொண்டவர்களாதலின் தங்கள் மதங்களை நிலைக்கச் செய்து சீவிப்பதற்கே சாதிகளை ஆதரவாக நிலைக்கவைத்திருக்கிறார்கள் (Aloysius, 1999). சாதிகளெப்போது ஒழியுமோ மதங்களும் அன்றே அனாதியாக ஒழிந்துபோம் என்பது திண்ணம். மதங்களுக்கு வரம்பு சாதிகளேயாம். அச்சாதிகளே கற்பனையாயின் சாதியுள்ளோர் மதங்கள் எத்தகையத்தென்பதை எளிதில் அறிந்து கொள்ளுவீர்களாக" என்று சாதியால் மதமும் மதத்தால் சாதியும் வளர்ந்து கொண்டிருப்பதனைக் கூறி அதனால் விளையும் கேடுகளை, "சாதிபேதமே ஊரைக்கெடுப்பதற்கு ஆதாரம்! சாதிபேதமே ஒற்றுமெய் கேட்டிற்கு ஆதாரம்!! சாதிபேதமே கற்றவித்தைகளைக் காட்டாது ஒளிப்பதற்கு ஆதாரம்!!!" எனவே அதை விட்டொழியுங்கள் என்று சமூக அக்கறையுடனான விடுதலைச் சிந்தனைகளை முன்மொழிந்துள்ளார் (Aloysius, 1999).

மேலும் பல்வேறு கருத்துக்களுடன் சாதி மத பேதத்தை ஒழிக்க மக்கள் அடைய வேண்டிய தெளிவை உரைத்திருக்கிறார். இவைற்றை முழுமையாக அறிந்து கொள்ள ஞான. அலாய்சியஸ் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ள அயோத்திதாசர் சிந்தனைகள் எனும் தொகுதிகளைக் கற்றறிவதனால் மேலும் தெளிவுபெறலாம்.

## மக்கள் பண்டிகைகளின் விவரம்

சாதி ஒழிப்பையும் சாதிபேதங்களைக் கொண்டிருக்கும் மதத்தின் ஒழிப்பையும் மிகத்தீவிரமாகப் பேசும் அயோத்திதாச பண்டிதர் மக்களிடம் இரண்டறக் கலந்துள்ள சில பண்பாட்டு நடவடிக்கைகளை, அதன் உள்ளார்ந்த அர்த்தங்களை ஆராய்கிறார். அதன் முடிவுகளை மக்கள் வாழ்வியலுக்கு ஏற்பவும் பௌத்த வரலாற்றினை ஒட்டியும் நிறுவச் செய்கிறார். அந்த வகையில் ஆடிமாதத்தில் அம்மனைச் சிந்திக்கும் விபரம் என்று பண்டிதர் தரும் கருத்தினை, "கிராம தேவதையாகவும், குலதேவதையாகவும், ஊர்காவற்காரியாகவும், காவலூர் அம்மனாகவும் இருப்பதாய் வாக்களித்து ஊழியாற்றோன்றுங் கொடுமாறியை அகற்றி ஆரோக்கியம் பெறச் செய்தவள் அம்பிகை என்னும் அவ்வையாதலின் அவளை சிந்திப்பவர்கள் சுத்தசீலத்தினின்று பொய், கொலை, களவு, கள்ளருந்தல், காம முதலிய பஞ்சபாதகங்களை அகற்றி தன்மசிந்தனையைப் பெருக்கி சிந்திப்பதே சிந்தனையாகும்." என்றவாறு ஒரு நாட்டுப்புற ஆய்வாளரைப்போல நுணுகி ஆராய்ந்து விளக்குகிறார் (Aloysius, 1999). காற்றின் மூலம் பரவும் பெருந்தொற்றுக்களாகிய அம்மை, பிளேக், தற்போதுள்ள கொரனா போன்ற தீ நுண்மி நோய்களிலிருந்து காக்கும் தன்மையை வேப்பிலை பெற்றிருப்பதாகவும் சோதனை முறையில் அதனைக் கண்டறிந்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்த அவ்வையே இன்று மக்களின் வழிபாட்டு வடிவமான அம்மனாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் விவரங்களை அளிப்பதைக் காண முடிகிறது.

தமிழகத்தில் மாபலிபுறமென வழங்கப்படும் பகுதியிலிருந்து ஆட்சி செய்த மாவலி சக்கரவர்த்தியின் வரலாற்றிலிருந்து மாவலி அமாவாசி தன்ம விவரம் எனும் தலைப்பில் "மாவலி அமாவாசி தானத்தை மாளிய அமாவாசை என்று மாற்றியதுமன்றி வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கம் நிறைந்த சுத்தவீரனாகும் மாவலியை தங்கட் கடவுள் மிதித்துக் கொன்றுவிட்டாரென்று மாவலிச் சக்கரவர்த்தியின் சிறப்பையுங் கெடுத்து தங்களுக்குஞ் சீவன உபாயத்தைத் தேடிக் கொண்டார்கள். (மாபலி-பாணவம்மிசத்து அரசன்)" என இந்து வைதிக பார்ப்பனர்கள் செய்த வரலாற்றுத் திரிபுகளை எண்ணி நொந்துகொள்கிறார் மக்களை மீண்டும் நன்னெறிப் பாதைக்கு இட்டுச்செல்ல முயற்சித்திருக்கிறார் (Aloysius, 1999).

இதேபோன்று மக்களிடம் வழக்கத்தில் இருந்து வருகிற விபூதி, திருநீறு எனும் பெயரில் நெற்றியில் இட்டுக்கொள்ளும் சாம்பலைப் பற்றி நீண்ட ஆராய்ச்சி விளக்கத்தில் அதனால் யாதொரு பயனும் இல்லை என்பதைத் தெளிவுறுத்துகிறார். மேலும் கார்த்திகை தீபத்திற்குக் கார்த்துல தீபம் என்று சில வரலாற்று விளக்கங்களும் தீபாவளித் திருவிழாவாக இருந்துவரும் நாளுக்கு எள் எண்ணெய்யாகிய நல்லெண்ணெய் கண்டறிந்து அதன் பயன்பாட்டைப் பெற்ற நாளாகவும், அந்நாளில் தீபவதி நதியில் தலைமுழுகிக் கொண்டாடும் விழா என்று புதிய வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைத்து மக்களை அதன் வடிவில் அப்பண்டிகைகளைப் பின்பற்ற வலியுறுத்துகிறார்.

இவ்விடங்களிலெலாம் கூற்றுப்படி, "அம்மன் வழிபாடு குறித்தும் கார்த்திகை தீபத் திருவிழா குறித்தும் தீபாவளி குறித்தும் சங்கராந்தி, பிறப்புச் சடங்கு, திருமணச்சடங்கு, மொட்டையடித்தல், மஞ்சள் ஆடை உடுத்தல் போன்ற தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகளை விவாதிக்கும் அவருடைய கட்டுரைகள் அதுவரையில் நாம் அறிந்திராத புதிய வாசல்களைத் திறந்துவிடும். மாயக்காரராகிய அவரை நமக்கு அறிமுகம் செய்கின்றன" என்பதாக நம்மை வியக்கவும் சிந்திக்கவும் வைக்கிறார் (Dharmaraj, 2019).

## மனிதன் என்னும் மானம்

மானம் கருதி மனித மனநிலையில் யாவரும் வாழவும் தன்னுடன் இம்மண்ணுலகில் வாழும் பிற மனிதர்களையும் மனிதர்களாகாக மதித்து மனிதார்களாகவே நடத்தவும் கூடிய சிந்தனையை, "ஓர் விவேகியைப் பத்துப்பெயர்க் கூடிக்கொண்டு இவன் நீச்சன், கேவலன் தாழ்ந்தசாதி என்று புறக்கணித்து வருவார்களாயின் நாணமுற்று சீர்கெட்டு நாளுக்குநாள் நலிந்து விவேகம் மயங்கி நிலைகுலைந்து விடுவான்". என்றும் அதே "ஓர் யாசகனைப் பார்த்து பத்துப்பெயர்க்கூடி இவன் பெரியோன், விவேக மிகுந்தவன் உயர்ந்த சாதியான் சகலமுற் தெரிந்தவன் என்று உயர்த்திக்கொண்டே வருபவார்களாயின் நாளுக்குநாள் உயர்ந்து விவேகமிகுந்து நாகரிகமுற்று சகல சுகமும் பெற்று வாழ்வான்". என்றும் உரைக்கிறார் (Aloysius, 1999). இக்கருத்தின் மூலமாக மனிதனைச் சாதி உயர்ச்சி, தாழ்த்தி சொல்லி, மனிதனே மனிதனை மனித நிலையில் கருதாமல், நடத்தாமல் கீழ்நிலைக்குத் தள்ளும் சமூக உளவியலை உணர்த்துகிறார்.

"மனிதன் என்பவன் யார் என்னும் வினாவிற்கு விடையாக மனிதர்களை மனிதர்களாகப் பாவிப்பவன் எவனோ அவனே மனிதன்" என்று தொடங்கும் அயோத்திதாசர் "மனிதனென்னும் மானமும், சீவகாருண்யமும் அமைந்த மக்களிற் சிறந்த ஆறாவது தோற்றம் மனிதனென்று கூறப்படும். அவனே ஏழாவது தோற்ற தெய்வநிலை அடைபவனுமாவன் இவற்றிற்கு மாறாயச் செயலுடையோரை நரரென்றே தீர்க்கப்படும்" (Aloysius, 1999). என்று மனிதர்களை மனிதர்களாக வாழவிடாமல் பக்தியின் பெயரால், சாதியின் பெயரால் அடையாளங்களை ஏற்படுத்தியிருக்கும் கருத்துடையோர்களின் கருத்தைக் கருத்தால் அரைந்திருக்கிறார். இங்கு தெய்வ நிலையென்பதை மக்களின் எண்ணவோட்டத்திற்கும், அவர்களிடம் தொடர்ந்து வரும் மரபிற்கும் ஏற்பவே, மனித நிலையில் வாழ முற்படும் மனிதனே தெய்வநிலையையும் அடைகிறான் என்று பகுத்து ஆராந்தறியும் சிந்தனையிலே உரைத்திருக்கிறார் என்று பார்த்தல் தகும்.

அந்த வகையில் "மானமும் மாந்த நேயமுமே" மனிதனை மேன்மையான நிலைக்குக் கொண்டு செல்லும் என்று தமிழனை, மனிதனை மானத்துடன் எழுவதற்கும் வாழ்வதற்கும் தேவையான அறிவினைப் புகட்டியிருக்கிறார் திராவிடப் பேராசான் அயோத்திதாசப் பண்டிதர் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

சாதியற்றவர்களாக வாழ்ந்த மக்களிடத்தில் இந்து வைதீக பார்ப்பனிய மதம் எண்ணற்ற வேறுபாடுகளைக் கொண்ட வருணப்பாகுபாட்டினைப் புகுத்தியிருக்கிறது எனபதைக் காலங்காலமாக வரும் கருத்தியல் யுத்தத்தால் அறிய முடிகிறது. திராவிட சங்கம் என்று இலக்கியச் சங்கமும் பிறகான நவீன வளர்ச்சிக் காலத்தில் மொழித் தொடர்பான திராவிட ஆய்வும் அதன் கருத்துருவாக்கமும் நிகழ்ந்திருப்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. தமிழக அறிவு மரபில் திராவிடம் என்ற சொல்லை அரசியல் தளத்தில், அமைப்பாக்க முறையில் அயோத்திதாசப் பண்டிதரே முதலில் கையாண்டிருக்கிறார் என்பதையும் அவ்வமைப்பின் மூலமாக சாதிய அடக்குமுறையால் நிகழும் கொடுமைகளை எதிர்த்தும் கண்டித்தும் போராடிய தலைவராக விளங்கியுள்ளார் என்பதையும் பண்டிதரின் வாழ்க்கைப் போராட்ட நகர்வுகள் தெளிவுறுத்துகின்றன. இங்கு மதங்களின் பெயரால் கட்டுக்கதைகளின் மூலம் மக்கள் வாழ்வியல் பண்பாடு சிதைக்கப்பட்டிருப்பதையும் அதிலிருந்து தெளிவுபெற பகுத்தறிவு கண்கொண்டு செயல்பட வேண்டும் என்கிற சிந்தனையை அயோத்திதாசப் பண்டிதர் எச்சரிக்கை உணர்வாக அளித்திருப்பதைக் காண முடிகிறது. பெண்களுக்கு இழைக்கப்டும் கொடுமைகளைக் கண்டித்து அவர்களுக்குக் கல்வியும் தொழில் நுட்பமும் அளிக்க வலியுத்தியிருக்கிறார் என்பதையும் கணவனை இழந்த கைம்பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்து அவர்களின் வாழ்க்கையின் இன்னல்களைக் களையவும் தமிழ்ச் சமுதாயத்திடம் முறையிட்டிருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. தமிழன் எனும் பெயரிலான பத்திரிக்கையின் வாயிலாகச் சாதி ஒழிப்பு, சாதிகளைக் கற்பித்து அதனை வளர்த்து வரும் மதங்களின் ஒழிப்பு, தங்களது சுய சீவனத்துக்காக அத்தகைய மூடத்தனமான சிந்தனைகளைக் கையாண்டுவரும் பார்ப்பனியத்தின் மீது கடுமையான எதிர்ப்பு எனப் பண்டிதர் நிகழ்த்தியிருக்கும்

கருத்தியல் வாதங்களை அறிந்து கொள்ள முடிகிறது. மக்களின் வாழ்வியலோடு கலந்துவிட்ட சில பண்பாட்டு நிகழ்வுகளின் மீதான உண்மை வரலாற்றை எண்ணற்ற சான்றுகளுடன் எடுத்துக்காட்டுவதையும் அதன் போக்குகளை வேறுகோணத்தில் சிந்தித்துச் செயலாற்றவும் மக்களுக்கு அறிவுறித்தியிருக்கிறார் என்பதும் புலனாகிறது. இவற்றை விடவும் மிக முக்கியமாக மனிதனைத் தன்மானத்தோடும் சுயமரியதையுடனும் வாழவும், வாழ வழிவிடவும் சமூகத்தின்பால் வெகுண்டெழுந்த சீற்றத்துடன் பண்டிதர் நீண்ட உரையாடல் நிகழ்த்தியிருக்கிறார் எனபது தெளிவுறுகிறது. அவற்றுள் மக்கள் வாழ்வியலில் பண்டிகை உள்ளிட்ட பண்பாட்டு நிகழ்வுகளில் அவரின் அக்கறை கவனத்தில் கொள்ளத்தக்கதே ஆகும்.

## References

Aloysius, Gyana., (1999) Iyothee Thassar Sinthanaigal- I, Folklore Resources and Research Centre, St. Xavier's College, Palayamkottai, India.

Angayarkanni, C., Kiruthiga, K., (2021) Caste and dynamics of Iyothee Thass, International Research Journal of Tamil, 3(S-1), 290-295. https://doi.org/10.34256/irjt21s147

Bhakthavatsala Bharathi, (2018) Panpaattu Manudaviyal, Adaiyalam Publications, Tiruchy, India.

Dharmaraj, T., (2019) Iyothee Thassar: Paarpanar mudhal Parayar varai, Kizhakku Pathippagam, Chennai, India.

Iyothee Thass Pandithar. K., (1999) K. Iyothee Thass Pandithar Sinthanaigal, Dalit Sahitya Academy, Chennai, India.

Vijayakumar, P., (2019) Panmuga Nokkil Ayothidhasap Pandithar, Meddha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License